22882

Third International Tamil Conference
Paris

15th July 1970

Papers submitted by

Hon'ble Thiru M. O. H. Farook
Chief Minister - Pondicherry

on

"புதுவையும் பிறநாட்டுத் தொடர்பும்"

புதுவையும் பிற நாட்டுத் தொடர்பும்

பழம்பெரும் புதுவை

• ஒருவன் தான் வாழும் ஊரைப்பற்றியோ நாட்டைப் பற்றியோ தெரிந்துகொள்ளாதவரையில் அவன் நாட்டுப் பற்றுடையவன் என்று சொல்லவியலாது. பெற்ற தாயும் பிறந்த நாடும் வானினும் மிகச் சிறந்தன.

> ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானினும் நனி சிறந்தனவே''

எனக்கூறினார் பாரதியார். எனவே நாட்டுப் பற்றுவேண்டும் என வலியுறுத்திக் கூறுகின்றார். அங்ஙனம் பற்று ஏற்படுதற்கு மிகச் சிறந்த சாதனம் அப்பகுதியில் மக்களால் பேசப்படும் மொழியேயாகும். நாட்டைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ளாத வரையில், மொழியைப் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ள இயலாது. நாடு, தடாகம் என்றால் அங்குப் பேசப்படும் மொழி அத்தடாகத்தில் பூத்துக் குலுங்கும் தாமரையாகும், அது வாடா மலர். 'பூவிற் சிறந்தது பொங்கு தாமரை' என்று கூறப்பட்ட தமிழ்ப்புலவன்தன் பாட்டுப் பொய்யாகுமா? எனவே, மொழி களுட் சிறந்தது 'தமிழ் மொழி' எனக் கூறுவது உயர்வு நவிற்சியுமன்று, நாட்டுப் பற்றுமன்று. இயல்பாகவே அங்ஙனம் விளங்குகிறதென்பதை இங்குக் குழுமியுள்ள தமிழ்ப்பெரும் வல்லுநர்கள் – ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்வர் என்றே கருது கிறேன்.

தமிழகத்தின் திலகமாகிய புதுவை மாநிலம் மிகச்சிறியது தான். எக்காலத்திலும் அது கொண்டுள்ள புகழ் மிகப்பெரியது. நாடுகளின் பண்பையும், நாகரிகத்தையும், கலைவளர்ச்சியையும் நன்கு புரிந்து கொள்வதற்கு ஏற்ற நகரமாய் விளங்குகிறது. இயற்கை எய்திய முன்னாள் பாரத நாட்டு முதற்பெரும் அமைச்சர் நேரு எங்கள் புதுவையைப்பற்றிக் குறிப்பிடும்போது, அது பிறநாடுகளைக் கூர்ந்து கவனித்தற்கேற்றதோர் சாளரம் எனக் கூறினார். இத்தகைய சிறப்பமைந்த எங்கள் புதுவை மிகத் தொன்மையும் புதுமையும் கொண்டு விளங்குகின்றது.

இங்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மொழி அவ்வக்காலத்துச் சூழ்நிலைக் கேற்பத் தமிழகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வளர்ந்தோங்கி வருகிறது.

ஐரோப்பியர்கள் கடல் வாணிபம் செய்யத் தொடங்குவதற்குமுன், அராபியர்கள் மரக்கலங்களைச் செலுத்தி வாணிபம் செய்து வந்தனர். மேலும் போர்த்துகீச மாலுமி வாஸ்கோட காமா இந்தியாவுக்கு வந்தபோது அராபிய மாலுமி ஒருவன் வழி காட்டினனென்று வரலாற்றுச் செய்தி ஒன்று கூறுகிறது. தமிழகத்தில் கப்பலைச் செலுத்தும் திறமை வாய்ந்தவர்கள் இல்லாமலில்லை. முற்காலத்தில் தமிழர்கள்சோழமண்டலக் கரையோரமாகச் சிங்களத்திற்குச் சென்று அந்நப் போர் வீரர்களை இறக்கி இருக்கின்றனர். கி. மு. முதல் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இவ்வாறு நடைபெற்று வந்திருக்கிறது. பின் இந்தோசீனம், சிங்கப்பூர், மலாக்கா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளுக்கும் கப்பல் வணிகர் சென்றனர். இவ்வாறு பார்க்கும் போது, தமிழர்கள் பிற நாடுகளிற் சென்று குடியேறியும் தங்கள் கலை, பண்பாடு முதலியவற்றைப் பரப்பியுமிருக்கின்றனர் என்பதை உணரலாம். இக்கூட்டுறவால் வேற்றுப்புலச் சொற்கள் பல தமிழில் வந்து புகுந்திருக்கின்றன.

மேலும், மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பியர்கள் இங்கு வருவதற்குமுன்னே தமிழர்கள் அவர்கள் நாட்டுக்குச் செல்லும் வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர் எனலாம். அக்காலத்தில் ஆண்டொன்றுக்கு 120 வாணிபக் கப்பல்கள் இந்தியாவிற்கு வந்தன என்று ஸ்டிராபோன் என்பவர் கூறினர். ஐரோப்பாவிலிருந்து பல பொருட்கள் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. இங்கிருந்தும் பல பொருட்கள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். யவன ஆசிரியர் பிளினி ஓர் இடத்தில் எழுதும்போது, பழைம் ரோம நாட்டில் வெகு அருகியிருந்தமையால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தனர் என்று குறிப்பிடுகிறார். புதுச்சேரியில் யவனர் இருக்கை ஒன்றிருந்தது. மேலும் இந்தியாவிலிருந்த பெரிய நகரங்களில் இதுவுமொன்றாய் இருந்தது. இத்தகைய சிறப்புப் பெற்ற காலம், முதல் இரண்டாம் நூற்றாண்டுகளாகும்.

இச்செய்தியை யவனர்களான பெரிபுளூசும், தாலமியும் குறிப்பிட்டுள்ளனர். யவனர்கள் புதுச்சேரியில் துணிகளை வாங்கித் தங்கள் நாட்டிற்கு அனுப்பினர். மலாக்காவைப் பார்க்கினும், காவேரிப்பூம்பட்டினத்திலும், புதுச்சேரியிலும் கிரேக்கமொழி அதிகம் பேசப்பட்டு வந்தது. இஃதன்றியும் தமிழர்களும் மலாய்க்காரர்களும் பத்தாம் நூற்றாண்டு வரையில் கிரேக்க மொழியை வாணிபமொழியாகப் பயன்படுத்திவந்தனர். இச்செய்தியை அராபியப் பிரயாணி ஒருவர் உறுதிப்படுத்தியிருக்கிறார். இங்கு நாம் சிந்திக்கவேண்டியதொன்றுண்டு. யவன அலுவலாளர்கள், மாலுமிகள் எத்தனையோ தமிழ் மொழிகளைச் சிதைத்தும் திரித்தும் கூறிவந்தனர் – எழுதிவந்தனர். மலாக்கா நாட்டில் ஸபாக் (Zabag) என்ற ஊரில், வெண்மை, சிவப்பு, மஞ்சள் நிறமுள்ள கிளிகள் இருந்தனவென்றும் அவைகளுக்குக் கற்பித்தபடியே, அவைகள் அராபு, பாரசீகம், தமிழ் ஆகியவற்றைப்பேசினவென்றும் சொல்லப்படுகிறது. புதுச்சேரியிலும் மலாக்காவிலும் ரோமானியத்தொடர்பு மிக நெருக்கமாய் இருந்ததென்பதையுணரலாம்.

புதுக்கே பெயர்க்காரணம்

ரோமர்கள், தங்கள் தொழிலகங்களில் அடித்த நாணயங்கள் புதுச்சேரியில் புழங்கப்பட்டுவந்தன. மிகச்சிறிய தியோடஸ் (Theodose) நாணயம் ஒன்று கிடைத்ததன்றி, வாலன்டீன் (Valentine), தியோடசும் எடக்சியும் (Theodose and Eudoxie) இருக்கும் உருவமைந்த நாணயங்களும் சோழ மண்டலக்கரையில், நெல்லூரிலிருந்து புதுச்சேரி வரையிலுள்ள பகுதிகளில் கிடைக்கப்பெற்றனவென்று காலனல்மேக்கன்ஜி எழுதிய நூலில் குறிக்கப்பெற்றிருக்கிறது. சுமார் 2,200 ஆண்டுகளுக்குமுன் புதுச்சேரியை யவனர்கள் "புதுக்கே" என்றழைத்தனர். புதுச்சேரி என்ற பெயரையே அவர்கள் அங்ஙனம் கூறினர். புதுக்கே எனக்கூறப்படுவது அருகன்மேட்டுப் பகுதியேயாகும். புதையுண்ட அந்நகரத்தை அகழ்ந்து பார்த்தபோது உண்மைகள் விளங்கின. கி. பி. 60-ஆம் ஆண்டில் பெரிபுளூஸ் என்ற யவன ஆசிரியர் எழுதிய குறிப்பிலும், 'சோழ மண்டலக்கரையோரத்தில்

பொதுக்கே' என்று பெயர்கொண்ட ஓர் துறைமுகம் இருக்கிற தென்று குறிப்பிட்டார். பொதுக்கே என்ற சொல்லைப் பொது + கே எனப் பிரிக்கலாம். பொதுக்கே என்றெழுதிய யவன ஆசிரியர்கள், கிரேக்கமொழி அமைப்புக்கேற்பச் சொல்லைச் சிறிது மாற்றமாக எழுதினர். சொல்லின் முதல் அசையில் உகரம் வந்தால் அவர்கள் ஒகரமாக எழுதுவதியல்பு. இம்முறைப்பற்றிப் "புது" என்ற பகுதியைப் பொது என்றெழு தினார்கள். அப்போது "கே" என்றால் என்ன? "கே" என்பது கிரேக்க மொழியில் விகுதியாகும். எனவே 'புதுக்கே" எனச் சொன்னார்கள். இதைப்போலவே இந்தியா என்ற சொல்லை அவர்கள் 'இந்திக்கே" என்று வரைந்தனர்.

நிற்க, இந்தியர்களின் நாகரிகம் ஒரு சில நாடுகளுக்குத் தெரியாத காரணத்தால், வெகுகாலம் வரையில் உரோமர்கள் தாம் நாகரிகத்திற் சிறந்தவர்களெனக்கருதினார்கள். உரோமர்கள் தங்கள் கப்பல்களை, எந்தக்காலத்தில் இந்தியாவுக்குச் செலுத்தி வந்தால், கடல் கொந்தளிப்பு, புயல்காற்று முதலியன இல்லாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்பதையும் ஆராய்ந்தார்கள். கடல் வழியாய் உரோமானிய நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரப் பருவக் காற்று அநுகூலமாயிருக்குங் காலத்தை ஹிப்பால் (Hippale) என்பவர் கி. மு. முதல் நூற்றாண்டின் இடையில் கண்டுபிடித்தார். இவ்வாறு கண்டுபிடித்தபின் வாணிபம் சிறப்பாக நடைபெற்றதெனக்கூறுவர்.

தமிழர் தம் திறன்

தமிழர்கள் பல்திசைக்காற்றின் இயல்பை வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே நன்குணர்ந்தவர்களாயிருந்தமையால், அவ்வக்காலத்துக்கேற்பத் தங்கள் பிரயாணத் திட்டத்தை வகுத்துக்கொண்டு கடற் செலவு செய்தனர். கொண்டல், தென்றல், குடகாற்று வாடை என்று இவர்கள் பெயரிட்டமைப் பதையுங்காண்க. இன்னும் முன்பனிக்காலம், பின்பனிக்காலம், வெயிற்காலம், கோள்பொருத்தம் முதலியவற்றையும் ஆராய்ந்து மரக்கலம் செலுத்தினர். மேற்குத்திசைக் காற்று ஆடித்திங்களில்

வீசும் என்ற கருத்தைக் 'குடிகாற்றெறிந்து' என்ற சொல்லுக்குப் பொருள் காணவந்த அடியார்க்குநல்லார் 'மேல் காற்று விசைத்து' என்று பொருள் எழுதி 'ஆடித்திங்களாதலின் குடகாற்றெறிந்ததென்க' எனக்கூறினர். எனவே, தமிழர்கள் கப்பல் யாத்திரை செய்யவேண்டிய ஊர்களை முன்னதாகவே உணர்ந்து, அவ்வூர் இருக்கும் திசையைத் தொடர்ந்து காற்று வாட்டத்தில் மரக்கலங்களைச் செலுத்தினர்கள். பங்குனித் திங்கள் ஈறுக வீசும் காற்று, கீழ்க்காற்றாகும். இக்காற்றுக்குத் தான் கொண்டல் எனப்பெயர். பதினெட்டாம் நூற்றாண்டில், வான நூற் புலவர் லெழாந்தீய் (Le Gentil) என்பவர், பிரான்சு மன்னர் ஆணையால் புதுச்சேரிக்கு வந்தார். இங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவிப் புதுவையின் இயற்கை வளம், சூழ்நிலை, காலவேறுபாடு, பருவநிலை, தீர்க்கரேகை, அஷரேகை முதலிய வற்றை ஆராய்ந்தார். 'இந்திய கடற் செலவு' என்ற நூலும் எழுதினர். இந்நூலின் கருத்தைக் கொண்டு பிற்காலத்தில் அறிஞர்கள் பலர் பிரஞ்சிந்திய வரலாற்றைத் தொகுத்து எழுதியிருக்கிறார்கள். இவர் எழுதிய நூலின் உதவியால்தான் அரிக்கன்மேட்டை அகழ்ந்து பார்க்க மேலும் ஊக்கம் ஏற்பட்டது.

அவர் தாமெழுதிய இந்தியக் கடற் செலவு என்ற நூலில் "இந்தியாவில் சோழ மண்டலக் கரையில் இருக்கும் தமிழர்களின் பழக்க வழக்கங்கள், மதக்கொள்கைகள், நேர்ந்த யுத்தங்கள், வாணிப நிலை, சோதிடவான நூற்புலமை, பழைய கல்தேய நாட்டினரின் புலமையோடொத்துக்காணப் படுகின்றன" எனக்குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்கள், மரக்கலங்களைச் செலுத்திப்பிற நாடுகளுக்குச் சென்றபோது, பல தமிழ்ச்சொற்களைப்பிறநாட்டினரும் தெரிந்து கொண்டனர். இதைப்போலவே, பிறநாட்டு மொழியையும், கற்றுக்கொண்டனர். மேலும், சில நூலாசிரியர்களும் பிறரும், மீகாமன்களுக்குப் பலமொழி தெரியும் எனக்கூறுவது உண்மையே.

நிற்க, சோழமண்டலக் கரையோரங்களில் யவனர்கள் குடியிருப்பு இருந்ததுபோலவே, இன்றைய புதுவைக்குத் தென்பாகத்திலமைந்த அரிக்கன்மேட்டிலும் யவனர் இருக்கை இருந்ததென்பதை நன்குணரலாம். அங்கு அகழ்ந்தெடுத்த பொருட்களும், கடற் செலவு செய்த தாலமி, பிளினி, போன்றோர் வரலாற்றுக் குறிப்பும் நமக்குச்சான்று பகர்கின்றன.

புதுச்சேரித் துறைமுகத்திற்கு நேர் கிழக்கே பரந்திருக்கும் கடற்கரையோரத்தில் ஓர் துறைமுகம் உண்டு. அது மலேயாத் துறைமுகமாகும். அந்தத் துறைமுகத்திலும் யவனர்கள் வாணிபம் செய்து வந்தனர். அதை அவர்கள் தக்கோலப் பெரும் வணிக நிலையம், எனக்குறிப்பிட்டனர். இதைச் செரினி (Gerini) என்பவர் தக்குவாபா (Takuapa) என்றார். ஆனால் கல்வெட்டில் தக்கோலம் என்றே காணப்படுகிறது. 1909-இல் ஓர் சேனாபதி அங்குத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். கம்போடியாவில் பல தமிழ்க்கல்வெட்டுக்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். ‘கம்போஜ்’ (Cambodge) என்ற பிரஞ்சு உச்சரிப்பைக் கருதும்போது சாம்பசிவ என்ற சொற்றொடர் போல் காணப்படுகிறது. ‘சாம்பசிவ’ என்ற பெயரே நாளடைவில் கம்போஜ் என மருவி வந்திருத்தல் வெறுங்கற்பனையல்ல. எனவே, தமிழ்மொழி வெளிநாடுகளில் கல்வெட்டுமூலமாகவும் காணப்படுகிறதென்பதை நன்குணரலாம்.

நாணயங்கள்

வரலாற்றின் உண்மையையும் தெளிவையும் உணர்ந்து கொள்வதற்கு நாணயங்கள் மிகுந்த பயனுடையன. இந்திய நாட்டுப் பண்டங்களை யவனர்கள் பொன்கொடுத்து வாங்கினர் எனக்கூறப்படுகிறது. பொன் கொடுத்து வாங்கினார்களென்றால், பொன்னால் செய்த நாணயங்களைக் கொடுத்து வாங்கினார்கள் என்றுணரலாம். மேலும், அக்காலத்தில் கொ ரி என்ற பலகறைகளை, நாணயங்கள்போல் உபயோகித்தனர். அவைகள் மிகக் குறைவான இயற்கை நாணயங்கள். கடலோரங்களில் கிடைக்கும் சிறுபலகறை (கிளிஞ்சல் சிப்பி) களைப் பயன்படுத்தினர். மலைத்தீவுகளிலிருந்து இவைகளைக் கொணர்ந்தனர்.

இவைகளுக்கு நாணய மதிப்புத் தந்தனர். அதிலும் ஒரு காசுக்கு ஐந்து பலகறைகள் எனக்கணக்கிட்டனர். இவைகளை இயற்கை நாணயங்கள்.

கொரி யென்றா லென்ன?

இதற்குப்பொருள் பிரஞ்சு அகராதிகளில் என்ன சொல் கிறார்கள் என்பதைப் பார்ப்போம். "லரூஸ்" (Larousse) அகராதியில் கொரியென்பது சிறிய பலகறை. இந்தியாவிலும், செனேகாலிலும் நாணயமாக வழங்கப்படுகிறது எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். பிரஞ்சு வேர்ச்சொல் அகராதியில், (Dictionnaire Etymologique de la langue Française) கொரியென்பது சிறிய பலகறை. இந்தியாவிலும் ஆப்பிரிக்கா விலும் நாணயம்போல் வழங்கப்பெற்றது" எனக்காணப்படு கிறது. மேலும் அந்த அகராதியில், கொரி என்பது **இந்திய நாட்டு மொழி** எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய நாட்டு மொழி என்றால் இந்திய நாட்டின் எந்தப் பகுதியில் எந்த மொழியில் வழங்கப்பெற்ற மொழி என்பதைக் கவனிக்கவேண்டும். யவனர்களின் இருக்கைகள் சோழ மண்டலக் கரையில் இருந்தனவென்பதுண்மை. பெரிபுளூஸ் குறிப்பின்படி புதுக்கை கப்பல்பிடிக்கும் இடங்களுள் ஒன்று எனத்தெரிகிறது, அதேகாலத்தில் விளங்கிய காவிரிப்பூம் பட்டினமும் யவனர் கப்பல் தங்குமிடமாயிருந்தது. யவனர்கள் இருக்கைகளை அமைத்துக்கொண்டு பண்டங்கள் வாங்கும் போது, கொரி என்று சொல்லும் அச்சிறிய இயற்கை நாணயத்தை உபயோகித்திருக்கின்றனர். பிரஞ்சு அகராதியில் கொரி என்ற சொல் இந்திய மொழி என்று எழுதப்பட்ட போதிலும், அம்மொழி தூய தமிழ் மொழியின் சிதைவாகும். "குறி" என்ற தமிழ்ச்சொல் அளவைக்குறிக்கும். அதாவது மதிப்பை அளவிடுவதற்காகக் கூறப்பட்டமொழி அதுவாகும். ஒரு பொருளை அளவாகப்பெற்று அளவாகக் கொடுத்தலுக்குக் "குறி எதிர்ப்பு" எனக்கூறினர் வள்ளுவர்.

'வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து',

என்ற குறட்பாவால் உணரலாம். பொருளின் மதிப்பைக் குறுப் பதற்காக உபயோகப்படுத்தும் பலகறையைக் குறியென்று

குழூச்சொல்லாக அமைந்திருக்கவேண்டும். நாளடைவில் குறி யென்ற தமிழ்ச்சொல், கொரியென மருவியது. ரோமர்கள் இச்சொல்லைக் கொரியெனச் சொல்லிவந்தனர். பிரெஞ்சுமொழியிலும் அதைக் கொரி என்று அழைக்கின்றனர். இச்சொல் அருகன்மேட்டில் உண்டானதென்று சொல்வதில் வியப்பொன்றுமில்லை.

புதுக்கையும் பூம்புகாரும்

கி. மு. 60-இல் வாழ்ந்துவந்த பெரிபுளூஸ் என்னும் யவன ஆசிரியர், தாம் எழுதிய கடற்செலவுக்குறிப்பில் சோழமண்டலக் கரையோரத்தில் கப்பலை நிறுத்துவதற்கேற்ற துறைமுகங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். அவை கமரா (காவேரிப்பட்டினம்) புதுக்கே (புதுச்சேரி) சோபத்மா (மரக்காணம்) ஆகியனவாம். இவை மூன்றும் பெரிய துறைமுகங்களெனவும் எழுதியுள்ளார். இவ்வாறே தாலமி என்பாரும் குறிப்பிட்டுள்ளார். சிலப் பதிகாரத்தில் காவேரிப்பூம்பட்டினம் என்றும் பூம்புகார் என்றும் வழங்கப்படுகிறது. புதுக்கையும் பூம்புகாரும் சம காலத்திலிருந்த பெருந்துறைமுகங்களாகும். இவற்றுள்ளும் கப்பல் பிடிப்பதற்கு ஏற்ற துறைமுகம் புதுக்கையாயிருந்தது.

சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலிய நூல்கள் கடைச் சங்கத்திறுதிக்காலத்தில் இயற்றப் பெற்றனவெனக்கூறுவர். கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சிலப்பதிகாரத்திலும், பட்டினப்பாலையிலும் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றமையால் அத்தகைய சம மதிப்பிற்குரியதே புதுக்கையென்றறிதல் வேண்டும். புதுவையைப் பற்றிச் சங்கப்புலவர்கள் பாடாவிட்டாலும், காவிரிப்பூம்பட்டினம் வாணிபத்தில் எப்படிச் சிறப்புப் பெற்றிருந்ததோ, அப்படியே புதுக்கையும் சிறப்புப் பெற்றிருந்தது என்பதை யவனர்கள் எழுதிய குறிப்புக்களால் நன்குணரலாம். மேலும் காவிரிப்பூம்பட்டினத்தில் யவனர்களுக்கு இருக்கை இருந்த செய்தி, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலிய நூல்கள் நுவல்கின்றன. இதைப்போலவே,

புதுவையிலும் யவனர் இருக்கை இருந்ததென்பது வெளிப்படை. இச்செய்தி அருகன்மேட்டு அகழ்வாராய்ச்சியால் மேலும் உறுதிப் படுகிறது.

புதுக்கை பூம்புகார் ஆகிய இவ்விரு நகரங்களிலும் மரக் கலங்கள் செய்தல், பல்வேறு அணிகள் தயாரித்தல், சிற்பங்கள் அமைத்தல் ஆகிய தொழில்கள் நடைபெற்றிருக்கின்றன. உறைக்கிணறுகள், குளங்கள், ஏற்றுமதி, இறக்குமதி, சுங்கம் வசூலிக்கும் முறை ஆகிய இவற்றில் ஒருமைப்பாடுகள் காணப் படுகின்றன. "அடல்வாள்யவனர்" என்று பட்டினப் பாலையில் கூறப்பட்டபடியே, புதுக்கையிலும் யவனர்கள் தங்கள் பகுதி களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

புதுக்கையில் கிரேக்கம், தமிழ் முதலிய பல மொழிகள் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர். இதைப் போலவே காவிரிப் பூம்பட்டினத்திலும் பல மொழிபேசுவோர் இருந்தனர். இச் செய்தியை,

"மொழிகள் பெருக்கிய பழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்தினி துறையும்"

என்ற அடிகள் விளக்கும்.

எனவே, புதுக்கையும் பூம்புகாரும் ஒருமைப்பாட்டுத் தன்மையுடையனவாகவே காணப்பட்டன.

முடிவுரை

பாரதத்தின் ஒரு சிறு பகுதியாகிய புதுவை எக்காலத் திலும் மிகச் சிறப்புடன் விளங்குகின்றதென்பது வரலாற் றுண்மை. மூர்த்தி சிறியதாயினும் கீர்த்திபெரியது என்று சொல்வதுபோல், புதுவையின் சிறப்பு, தனித்தன்மை வாய்ந்தது. மேற்கத்திய நாடுகளின் தொடர்பு சுமார் இருபத்து இரண்டு நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. அராபியர்களும் சீனர்களும் புதுவையுடன் தொடர்பு கொண்டிருந்தனர். புதுவை யில் பல மொழி பேசுவோர் இருந்தனர். இன்றும் அத்தகைய சூழ் நிலையைக் காணலாம். போர்த்துகீசர்கள், டேனிஷ்காரர்கள்,

ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள் முதலியோர் தங்கள் மொழிகளைப் பேசினர். மொழிபல பேசிவந்தபோதிலும், ஒன்று புரி கொள்கையுடையராய் அன்பும் இன்பும் பெருக வாழ்ந்தனர்.

புதுவையில், துய்ப்ளேக்ஸ் கவர்னராயிருந்தபோது, திறமை மிக்க நெசவாளர்கள், துணிகளில் சித்திரங்கள் எழுதி வண்ணப் படாம் ஆக்குவோர், கட்டிடம் கட்டும் கொத்தர்கள் இருந்து வந்தனர். 'செஞ்சிகொண்டான்' என்று புகழ்பெற்ற புஸ்ஸி பதினைந்தாவது லூய் மன்னரின் காதற்கிழத்தியான மதாம் போம்பதூர் சீமாட்டிக்குப் புதுவையில் நெய்த மெல்லிய துணியைப் பொன்பேழையில் வைத்துத் தந்தாரென்றால், புதுவையில் நெய்த துணிகள் எத்தகைய கவர்ச்சி யுடையனவாய்த்திகழ்ந்தன வென்பதை உணரலாம்.

ஆனந்த ரங்கப்பிள்ளை எழுதிய நாட்குறிப்பில் பிரஞ்சு, தமிழ், பாரசிகம், இந்துஸ்தான், டச்சு, போர்த்துகீசம் முதலிய பல சொற்களை ஆங்காங்கே வருவித்திருக்கின்றார்.

நிற்க, வெளி நாட்டில், இந்திய பண்பாட்டு வளர்ச்சிக்குத் தமிழர்கள் பல உதவிகள் புரிந்திருக்கின்றனர். புதுவை, பிரஞ்சு-இந்தியக் கலைக்கழகத்திலும் கம்போடியா, இந்தோனேசியா ஆகியவற்றில் இருக்கும் தூரக்கிழக்குப் பிரஞ்சு ஆராய்ச்சிக் கழகத்திலும் செய்யப்படுகின்ற ஆய்வுகளே போதிய சான்றாகும்.

மேலும், ஸ்ரீ அரவிந்தர் அருளிய ஆன்மீக சம்பந்தமான தத்துவங்கள் உலகெங்கும் சுடர்விட்டுப் பரவுகின்றன. இச் செயல் எங்கள் புதுவைக்குத்தான் தனிச்சிறப்பளிக்கிறது. புதுவை, பிரஞ்சு இந்தியப் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் டாக்டர் ழி. ஃபிலியோஜா அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்திய பண்பாட்டு ஆராய்ச்சிக்கு, அமைதிசேர் நல்லிடமாக விளங்குவதும் எங்கள் பொன்னிகர் புதுவையே.

" நாவிருக்கும் செந்தமிழோ டிசை இருக்கும்
நவின்றிருக்கும் தொடர்மொழியிற் பொருள் செறிந்த
பாவிருக்கும் நெஞ்சிலெல்லாம் அன்பிருக்கும்
பல்லோர்வாழ் எம் புதுவை நல்ல ஊரில்"

என்றுரைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பகர்ந்த மொழி பொய்யாகுமா?

ஆய்வு நூல்கள் :-

L'Inde et les Romains par G. Jouveau Dubreuil.
History of India by S. S. Murdeshwar. B. A., B. T.
Ancient India Vol. II
Mackenzie collection.
Les Relations exterieures de l' Inde par Jean Filliozat
Les fouilles d' Arikamedu par Pattabiramin.
Dupleix par G. J. Dubreuil.

முதலியன.

புதுவை அரசு அச்சக இயக்குநரால் அச்சிடப்பட்டது

61